# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097195

1. District : மாவட்டம் மதுரை | PS: காவல்நிலையம் ஊ.த.க பிரிவு | Year: ஆண்டு 2018 | FIR No.: மு.த.அ. எண் 17/2018 | Date: நாள் 29.10.20

2. (i) Act சட்டம்: | Sections பிரிவுகள்: Sec 7 of PC Act 1988

   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: as amended by Preven

   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: of corruption (Amend Act 2018

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் | Date to : நாள் வரை 1) 17.10.18 காலை சுமார் 10.0 மணியளவு

   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை 2) 26.10.18 பகல் சுமார் 12. மணியளவில்

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.10.2018 | Time : நேரம் 08.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.10.2018 | Time : நேரம் 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமான புகார்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 9 கி.மீ தென் மேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி தமிழ் நாடு உதவி மின் பொறியாளர் அலுவலகம், முத்துப்பட்டி மெயின் ரோடு, டி.வி.எஸ் நகர், மதுரையில் வைத்து.

   (c) In case outside limit of this Police Station then the Name of P S District

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. SP நாராயணன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் AL. சுப்பையா

   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 20.08.58 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் புகைப்படம் & வீடியோ | (g) Address : முகவரி பிளாட் எண் HIG 4657, T.N.H.B வில்லாபுரம், மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) திரு. ராஜா, உதவி மின் பொறியாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகம், முத்துப்பட்டி மெயின் ரோடு, டி.வி.எஸ் நகர், மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/10/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

SP. N7
29/10/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 29.10.2018 at. 09.45 hrs

Name: பெயர் க.குமரகுரு
Rank: நிலை காவல் ஆய்வாளர் No எண்
இ.த.க. பிரிவு,
மதுரை.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)p 2

**<u>சமர்ப்பிக்கப்படுகிறது</u>**

இன்று 29.10.2018-ம் தேதி காலை 08.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது மதுரை வில்லாபுரம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய குடியிருப்பு பகுதியை சார்ந்த சுப்பையா மகன் SP.நாராயணன் என்பவர் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்தார் அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர், SP.நாராயணன், த/பெ. AL .சுப்பையா, பிளாட் எண் : HIG – 4657, T.N.H.B, வில்லாபுரம், மதுரை.11. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் வில்லாபுரம் வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். வீட்டிலேயே SP.V.A டிஜிட்டல் ஸ்டுடியோ என்ற பெயரில் புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்கும் தொழில் செய்கிறேன். பிளாட் எண் 31, சத்தியசாய் நகர், டி.வி.எஸ்.நகர், மதுரை என்ற முகவரியில் எனக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கனவே இரு கடைகள் கட்டி வாடகைக்கு விட்டிருக்கிறேன். அதில் ஒரு கடையில் சந்தியா சலூனும், மற்றொரு கடையில் யூனிக் பிஸிக் என்ற ஜிம் செயல்பட்டு வருகிறது. அதன் அருகில் மாடி படிக்கு அடியில் உள்ள கடைக்கு புதிய மின் இணைப்பு வேண்டி கடந்த 17.10.2018-ம் தேதியன்று காலை சுமார் 10.00 மணியளவில் டி.வி.எஸ். நகர், முத்துப்பட்டி மெயின் ரோட்டில் உள்ள தமிழ்நாடு உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் விசாரித்த போது உரிமம் பெற்ற எலக்ட்ரிசியனிடம் உரிய படிவங்களை நிரப்பி, A.E. அவர்களிடம் ஒப்புதல் பெற்று RS.1,600/- பணம் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். நான் அங்கிருந்த லைசன்ஸ் பெற்ற எலக்ட்ரியசினிடம் புதிய் மின் இணைப்புக்கான படிவங்களை நிரப்பியவுடன், அவர் என்னிடம் அந்த அலுவலகத்தில் பணியாற்றும் ரவி என்ற உதவி பொறியாளரை நேரில் சந்தித்து கொடுக்குமாறு கூறினார். எனவே, நான் அந்த அலுவலகத்தில் பணியில் இருந்த உதவிப் பொறியாளர் திரு.ரவி அவர்களை நேரில் சந்தித்து புதிய மின் இணைப்பு வேண்டும் எனக் கூறினேன். அவர் என்னிடம் புதிய மின் இணைப்புக் கட்டணமாக ரூபாய் 1,600/- கட்ட வேண்டும் என்றும், கூடுதலாகத் தனக்கு RS.3,000/- (மூவாயிரம்) கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். நான் அவரிடம் தற்போது அரசு கட்டணம் மட்டும் கொண்டு வந்திருக்கிறேன், அதனைக் கட்டிவிடுகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் தனக்கு தனியாக ரூபாய் 3,000/-(மூவாயிரம்) கொடுத்தால்தான் ரசீது போட முடியும் என்று கூறினார். நான் அவரிடம் நீங்கள் சொல்லும் தொகை அதிகமாக உள்ளதே சார் என்று சொன்னேன். அதற்கு அவர் இப்போதைய நிலவரம் இதுதான், அரசுக் கட்டணம் தவிர, கூடுதலாக ரூபாய் 3,000/- (மூவாயிரம்) கொடுத்தால்தான் புதிய மின் இணைப்பு பெற முடியும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். நான் தொழில் நிமித்தம் வெளியூர் சென்றுவிட்டதால்,

மீண்டும் 26.10.2018-ம் தேதியன்று பகல் சுமார் 12.00 மணியளவில் மின் வாரிய அலுவலகத்தில் A.E திரு.ரவி அவர்களை நேரில் சந்தித்து பேசிய போது ரூபாய் 3,000/- (மூவாயிரம்) கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார், நான் அவரிடம் Rs.1,600/- (மட்டும்) கொண்டு வந்திருக்கிறேன் என்று சொல்லி அதற்கு ரசீது வழங்குமாறு கேட்டேன். அவர் என்னிடம் சரி பரவாயில்லை, இந்த அரசுக் கட்டணத்தை இன்று கட்டுங்கள், ஆனால் எனக்கு ரூபாய் மூவாயிரம் கொடுத்தால்தான் புதிய மின் இணைப்பு கிடைக்கும் என்று சொல்லி அருகிலிருந்த அலுவலரிடம் ரசீது போடுமாறு கூறினார். அவர் என்னிடம் ரூ.1,609/- (ரூபாய் ஆயிரத்தி அறுநூற்றி ஒன்பது) பெற்றுக் கொண்டு ரசீது போட்டுக் கொடுத்தார். நான் பணம் கட்டிய பின்னர் A.E திரு.ரவி அவர்களிடம், பணம் கட்டிவிட்டேன், நாளைக்கு புதிய மின் இணைப்பு கொடுக்க முடியுமா சார், என்று கேட்டேன். அதற்கு திரு.ரவி நீங்கள் ரூபாய் (மூவாயிரம்) 3,000/- கொடுத்தால்தான் புதிய மின் இணைப்பு கொடுக்க முடியும் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். நீங்கள் கேட்கும் தொகை அதிகமாக உள்ளதே சார் என்று சொன்னதற்கு, அவர் உங்களுக்காக வேண்டுமானால் RS.500/- குறைத்துக் கொள்கிறேன், 29.10.2018-ம் தேதி திங்கட்கிழமை RS. 2,500/- (இரண்டாயிரத்து ஐநூறு) ரூபாய் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தால், உடனே இணைப்பு கொடுத்து விடலாம் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். புதிய மின் இணைப்புக்கு அரசு கட்டணம் ரூ.1,609/- கட்டிய பின்னரும் ரூபாய் 2,500/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களும் நான் பொன்னமராவதி அருகிலுள்ள மிதிலைப்பட்டிக்கு சென்று விட்டதால் இன்று 29.10.18 ம் தேதி புகார் கொடுக்கிறேன் எனவே, புதிய மின் இணைப்பு கொடுக்க லஞ்சமாக RS.2,500/- கேட்கும் திரு.ரவி, உதவி மின் பொறியாளர் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நான் 26.10.2018 ம் தேதி பணம் கட்டியதற்கான ரசீது எண். 1584834- நகலை இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, Sd xxxx (SP.நாராயணன்) 29.10.2018.

Sir, Received the written complaint on 29.10.2018 at 08.30 hrs., the genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Madurai Vigilance and Anti-Corruption Cr.No.17/2018 u/s.7 of PC Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.00 hrs today on 29.10.2018 and took for investigation. Sd xxxxx (K.Kumaraguru) 29.10.18, Inspector of Police, V & AC, Madurai.

Original FIR along with original written complaint of Tr.SP.Narayanan, S/o.AL.Subbiah plot No.HIG.4657, T.N.H.B, Villapuram, Madurai and copy of receipt No.1584834 is submitted to the Hon'ble Special Judge for Trial of cases under prevention of corruption act, Madurai and copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

29/10/18

(K.Kumaraguru)
Inspector of Police,
Vigilance and Anti- Corruption,
Madurai.